நாகப்பட்டினம் நகராட்சி

**2023–ம் ஆண்டு ஜூலை மாதம் –31–ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31–07–2023 | பொருள் எண்.1<br>நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணைமேயர்கள், நகர்மன்ற தலைவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13-07-2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலககுறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. நகர்மன்ற தலைவருக்கு ரூ.15,000/- நகரமன்ற துணைத்தலைவருக்கு ரூ.10,000/- மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5,000/-வழங்கி புதிய அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நாகப்பட்டினம் நகரமன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.<br>ந.க.எண். 3261 /2023/எப்1 | தீர்மானம் எண்.141<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | பொருள் எண்.2<br>நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவருக்கு ரூ.15,000/- நகர்மன்ற துணைத்தலைவருக்கு ரூ.10,000/- மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5,000/- வழங்கி அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13-07-2023 வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நாகப்பட்டினம் நகராட்சி சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றிட.<br>அலுவலககுறிப்பு:<br>1. நகரமன்றம் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானிக்கப்பட்டது.<br>ந.க.எண். 3261/2023/எப்1 | தீர்மானம் எண். 142<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | பொருள் எண்.3<br>அரசாணை எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19-04-2021-ன் படி 2023-2024-ம் ஆண்டிற்கு கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு நாகப்பட்டினம் நகராட்சியின் ஆண்டு பங்குத்தொகை ரூ.1,25,000/-ஐ நகராட்சிபொது நிதியிலிருந்து செலுத்துவற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2396/2021/சி1 | தீர்மானம் எண். 143<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி கோட்டைவாசல் பாதாளசாக்கடை கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 75எச்பி மின் மோட்டார் மற்றும் 35 எச்பி மின் மோட்டார் | தீர்மானம் எண்.144<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இரண்டு மோட்டார்களும் உயர்மின் அழுத்தம் காரணமாக காயில் மற்றும் பம்பில் பழுது ஏற்பட்டுள்ளது. அவற்றை பழுதுநீக்கம் செய்து மீண்டும் நல்ல முறையில் இயக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாளசாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந. க.எண். 892/2023/இ1 | |
| 31–07–2023 | **பொருள் எண்.5**<br>வருகின்ற 75 வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு இந்நகராட்சியின் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ள விழாவிற்கு ஒலிஒளி அமைப்புகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 38/2023/இ1 | தீர்மானம் எண்.145<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | **பொருள் எண்.6**<br>அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.01 பிளாக் எண்.14 நகரளவை எண்.1211 புதுப்பள்ளி குளத்தினை புனரமைப்பு செய்வதற்கு உரிய விரிவான திட்டக் கருத்துருக்கள் அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31588/2023/அம்ரூட்-1 நாள்.20.07.2023 மூலம் கோரப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் திட்டத்தின் கீழ் பணியினை மேற்கொள்வதற்கான திட்டக்கருத்துருக்கள் மற்றும் ரூ.50.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்படி திட்டப்பணிக்கு திட்டக்கருத்துருக்கள் தயார் செய்தல் மற்றும் இதர செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 773/2023/இ1 | தீர்மானம் எண்.146<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | **பொருள் எண்.7**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் – அக்கரைபேட்டை – வேளாங்கண்ணி சாலையில் கி.மீ 0/2 -ல் நாகூர் மற்றும் நாகப்பட்டினம் இரயில் நிலையங்களுக்கிடையில் கி.மீ. 77/700-800-ல் கடவு எண் 48-க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற உள்ளது. மேற்படி | தீர்மானம் எண்.147<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பாலப்பணியானது தஞ்சாவூர் (நெ) திட்டங்களின் கோட்டத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. மேற்படி பாலப்பணி யானது அமைகின்ற பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம், பேருந்து நிழற்குடை, பொதுக் கழிப்பிடம், உபயோகத்தில் இல்லாத மேல்நிலை தொட்டி மற்றும் இதர கீழ்கண்ட சாலைகளில் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை அகற்றி தர உதவிக்கோட்டப் பொறியாளர் (நெ), திட்டங்கள் உட்கோட்டம், கும்பகோணம் (கூ/பொ) அவர்களின் கடிதம் க.எண்:கடவு எண்.48/2023/இநிஉ/ நாள்.06.07.2023 ன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது<br>**<u>நில எடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பு பகுதியில் – இரயில்வே பாலத்தில் இருந்து.</u>**<br>1. தோணித்துறை சாலை அக்கரைப்பேட்டை பக்கம் – 310 மீட்டர்<br>2. சென்னை நாகப்பட்டினம் சாலை (திருவாரூர் பக்கம்) – 498 மீட்டர்<br>3. சென்னை நாகப்பட்டினம் சாலை (நாகூர் பக்கம்) – 492 மீட்டர்<br>தற்போது மேற்கண்ட பகுதிகளில் பாலம் அமைக்கும் பணி தற்போது நடைபெற உள்ளதால் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை அகற்றுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி பணியினை மேற்கொள்வதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1558/2022/இ1 | |
| 31–07–2023 | பொருள் எண்.8<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது இயங்கி வரும் குடிநீர் நீர்தேக்க தொட்டி வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் க.எண்.17723/கோ-980 .தி/பரா-நாகை/2023/ நாள்.17.07.2023ன் மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான நாகப்பட்டினம் நகராட்சி,4பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 980 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பட்டினச்சேரியில் 10.60 இலட்சம் லிட்டர் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் புதியதாக அமைக்கபடவுள்ள இடத்தில் இடையூராக உள்ள மரங்களை அகற்ற அனுமதி கோரப்பட்டுள்ளது . மேற்படி இடத்தில் உள்ள மரங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் மூலம் அகற்றுவதற்கு வழங்கப்பட்ட கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது .<br>அலுவலககுறிப்பு 1. மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 3090/2023/இ1 | தீர்மானம் எண்.148<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–07–2023 | பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது இயங்கி வரும் குடிநீர் நீர்தேக்க தொட்டி வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் க.எண்.17723/கோ-980 கூ.கு.தி/பரா – நாகை/2023/ நாள்.17.07.2023ன் மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான நாகப்பட்டினம் நகராட்சி , 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களை | தீர்மானம் எண்.149<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>சார்ந்த 980 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது மேற்கண்ட கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பால்பண்ணைச்சேரியில் 10.60 இலட்சம் லிட்டர் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் புதியதாக அமைக்கபடவுள்ள இடத்தில் இடையூராக உள்ள மரங்களை அகற்ற அனுமதி கோரப்பட்டுள்ளது . மேற்படி இடத்தில் உள்ள மரங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் மூலம் அகற்றுவதற்கு வழங்கப்பட்ட கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது .
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண்.3090/2023/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>31-07-2023</td>
<td>பொருள் எண்.10<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் குடியிருப்பில் மழைக்காலங்களில் மேற்கூரையில் நீர்கசிவு சீர்செய்தல், வீட்டின் முகப்பினை சீர்செய்தல் மற்றும் இதர பழுதுகளை உரிய அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டதில் பழுதுகளை உடன் சீர்செய்ய அறிவுறுத்தப்பட்டது . அதனைத்தொடர்ந்து நகராட்சி ஆணையரது குடியிருப்பினை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண்.. /2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.150<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31-07-2023</td>
<td>பொருள் எண்.11<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமானதும் தற்போது கலைஞர் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமானதும் தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021 - 22ன் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் மைய வளாகத்திற்கு கூடுதலாக கருங்கல் பதித்தல் (stone pitching) பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண்.4334/2022/இ1</td>
<td>தீர்மானம் எண்.151<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31-07-2023</td>
<td>பொருள் எண்.12<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமானதும் தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021 - 22ன் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் மைய வளாகத்திற்கு கூடுதலாக பேவர் பிளாக் நடைபாதை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு</td>
<td>தீர்மானம் எண்.152<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வைக்கப்படுகிறது | |
| | அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க.எண். 4334/2022/இ1 | |
| 31–07–2023 | பொருள் எண்.13<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பால்பண்ணைச்சேரி தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022 – 23 ன் கீழ் அங்காடி கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது . மேற்படி கட்டிடத்தின் முன்புறம் குளத்தின் கரையாக உள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி வடிகாலுடன் கூடிய மூடி அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.153<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். /2023/இ1 | |
| 31–07–2023 | பொருள் எண்.14<br>நாகப்பட்டினம் நகராட்சி திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைத்து விருதுகள் வழங்கும் அரசு விழாவிற்கு 27.07.2023 அன்று வருகை தரும் மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை வரவேற்றும் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சிக்கு பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ள ரூ.139.69 கோடி வழங்கியதற்கு நன்றி தெரிவித்து தயார் செய்யப்பட்ட திட்டப்பணிகளின் விவரங்களை 2 தினசரி நாளிதழில் மாலை மற்றும் காலை பதிப்புகளில் விளம்பரம்செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் நகராட்சியில் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரங்களை இரண்டு தினசரி நாளிதழ்களில் மாலை மற்றும் காலை பதிப்புகளில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது | தீர்மானம் எண்.154<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க.எண். /2023/இ1 | |

31-07-2023

**பொருள் எண்.15**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 ஜடையனா ஹாஜியார் தெருவில் உள்ள சிறுபாலமானது மிகவும் பழுதடைந்து உள்ளதனை அகற்றிவிட்டு புதியதாக அமைத்தல் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள சிமெண்ட் தளத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அப்பகுதி மக்கள் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி இடத்தினை உரிய அலுவலரால் நேராய்வு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். /2023/இ1

தீர்மானம் எண்.155

அ.கு.அனுமதிக்கப்பட்டது

31-07-2023

**பொருள் எண்.16**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வார்டு எண் 8ல் உள்ள வண்ணான் குளத்தினை மேம்படுத்திடும் பணியானது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 23ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு பணியானது முழுமையாக முடிக்கப்பட்டதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அலுவலர்களின் மூலம் நேராய்வு செய்யப்பட்டதில் குளத்திற்கு நீர்வரத்துபாதை அமைத்தல் மற்றும் குளத்திலிருந்து நீர்வரத்து பாதைகளை உட்புறம் மற்றும் வெளிப்புற பாதை அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்.. /2023/இ1

தீர்மானம் எண்.156

அ.கு.அனுமதிக்கப்பட்டது

31-07-2023

**பொருள் எண்.17**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வார்டு எண் 24 வேதநாயகம் செட்டித் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலங்கள் 3 எண்ணிக்கைகள் அமைத்திட நகர்மன்ற உறுப்பினர், அப்பகுதி பொதுமக்களின் மூலம் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து |

தீர்மானம் எண்.157

அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க.எண். /2023/இ1 | | |
| 31-07-2023 | **பொருள் எண்.18**<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2023/இ1 | | தீர்மானம் எண்.158<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31-07-2023 | **பொருள் எண்.19**<br>நகர்புறங்களில் பொதுமக்கள் மற்றும் சிறார்களுக்கு இடையூறு மற்றும் ஆபத்து விளைவிப்பதாக பொதுமக்களிடையே புகார்கள் வந்த வண்ணம் உள்ளதனை கட்டுப்படுத்தும் நோக்கில் நாய்களை கணக்கெடுத்து கருத்தடை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை கணக்கெடுப்பு செய்து கட்டுப்படுத்திடுவதற்கு ஏதுவாக நாய்களுக்கு கருத்தடை செய்யப்படும் இடமானது மிகவும் பழுதடைந்து உள்ளதனை உடன் சீர்செய்துதர கோரி துப்புரவு ஆய்வரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி இடமானது நேராய்வு செய்யப்பட்டதில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2023/இ1 | | தீர்மானம் எண்.159<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31-07-2023 | **பொருள் எண்.20**<br>நாகப்பட்டினம் நகராட்சியில் நகர மேம்பாட்டு நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு 07.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு. | | தீர்மானம் எண்.160<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்த நிறுவனங்களின் விவரம் | மதிப்பீட்டு விலைவிகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு இலகுரக வாகனம் கொள்முதல் செய்தல் பணி. | 8.00 | மெர்சஸ்.லெட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ், மேட்டுர். | 0.13% | |
| | | | மெர்சஸ்.மணி மோட்டார்ஸ் அன்ட் | | 2.50% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | டிரேடர்ஸ்,மேட்டூர். | | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.13 சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ்.லெட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ், மேட்டூர். ஒப்பந்த நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் |

ந.க.எண்.1623/2022/இ1

31-07-2023

பொருள் எண்.21

தீர்மானம் எண்.161

அ.கு.அனுமதிக்கப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடர் 2023-24 மான்ய கோரிக்கையில் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் குளங்களை மேம்படுத்த அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-24ன் கீழ் நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட குளங்களை மேம்படுத்துவதற்கு உரிய விரிவான திட்டக் கருத்துருக்கள் தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | தெற்கு பால்பண்ணைச்சேரியில் உள்ள மண்டப குளத்தினை மேம்பாடு செய்யும் பணி.(ward no.4, block no.11, Ts no.356). | 27.00 |
| 2. | நாகூர் ஈஸ்வரன் கோவில் குளத்தினை மேம்பாடு செய்யும் பணி. (ward no .6, block no.11, Ts no.558). | 41.00 |
| 3. | நாகப்பட்டினம் புண்டரீக குளம் (நீலாயதாட்சி அம்மன் கோவில் குளம்) மேம்பாடு செய்யும் பணி. (ward no .3, block no.06, Ts no.424). | 20.00 |

மேற்படி நகராட்சிக்குட்பட்ட குளங்களை மேம்படுத்தும் பணிக்கு விரிவான திட்டக்கருத்துருக்கள் அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள். 20.07.2023 மூலம் கோரப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் திட்டத்தின் கீழ் பணியினை மேற்கொள்வதற்கான திட்டக்கருத்துருக்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|
| | 2 | மேற்படி திட்டப்பணிக்கு திட்டக்கருத்துருக்கள் தயார் செய்தல் மற்றும் இதர செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்.773/2023/இ1

| | | |
|---|---|---|
| 31-07-2023 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது இயங்கி வரும் குடிநீர் நீர்தேக்க தொட்டி வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் க.எண்.17723/கோ-980 கூ.கு.தி/பரா – நாகை/2023/ நாள்.14.07.2023ன் மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான நாகப்பட்டினம் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 980 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டவாறு தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் புதியதாக அமைக்க இடம் கோரப்பட்டுள்ளது . அதன் விவரம் பின்வருமாறு. | தீர்மானம் எண்.162<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | தரைமட்ட தொட்டிகள் கட்டபட உள்ள இடம் | தரைமட்ட தொட்டியின் அளவு (இலட்சம்) |
|---|---|---|
| 1. | சாலமன் பார்க் | 9.65 இலட்சம் லிட்டர் |
| 2. | பால்பண்ணைச்சேரி | 10.60 இலட்சம் லிட்டர் |
| 3. | பட்டினச்சேரி | 10.60இலட்சம் லிட்டர் |
| 4. | வெளிப்பாளையம் | 13.65 இலட்சம் லிட்டர் |
| 5. | வெளிப்பாளையம்<br>(ஊராட்சிகளுக்கு) | 1.35 இலட்சம் லிட்டர் |

மேற்கண்ட இடங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் மூலம் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படவுள்ள இடங்களுக்கு உரிய தடையின்மைச் சான்று வழங்க கோரிய கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது .

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 3090/2023/இ1

| | | |
|---|---|---|
| 31-07-2023 | பொருள் எண்.23<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 மறைமலை நகர் பகுதியில் உள்ள பூங்கா முழுவதும் சேதமடைந்து அங்கு பல்வேறு சமூக விரோத செயல்கள் நடைபெறுவதால் அங்கு நகரமன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேரடி களஆய்வின் மூலம் உடனடியாக பூங்காவினை சுத்தம் செய்து மற்றும் அங்குள்ள விளையாட்டு பொருட்கள் அமைத்துதரவும், மின்விளக்குகள் பொருத்திதரவும் நகர்மன்ற உறுப்பினரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கண்ட பொருள் தொடர்பான பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.163<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். /2023/இ1

| | | |
|---|---|---|
| 31-07-2023 | பொருள் எண்.24<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 நம்பியார் நகர் பகுதியில் உள்ள 300 மீட்டர் சாக்கடை முழுவதும் சேதமடைந்து தூர்ந்துபோய் விட்டது. அதனால் கழிவுநீர் முழுவதும் சாலையிலும், குடியிருப்பு பகுதியிலும் ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால் அந்த சாக்கடைகளை புதிதாக அமைத்து அதற்கு மூடி இட்டுத்தரவும் நகர்மன்ற உறுப்பினரால் கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கண்ட பொருள் தொடர்பான பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.164<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31-07-2023 | பொருள் எண்.25<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 நம்பியார் நகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் அனைத்து கழிவறைகளும் பழுதடைந்து கீழே விழுந்துவிட்டது. அதனை நகரமன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேரடி களஆய்வின் மூலம் இரண்டு கழிவறைகள் மற்றும் மாணவர்கள் குடிப்பதற்கும் மற்ற அடிப்படைத் தேவைகளுக்கும் குடிநீர் தேவைப்படுவதால் உடனடியாக போர் மூலம் குடிநீர் பெற போர் வசதி அமைத்துதரவும், அதற்கு தேவையான மின்மோட்டார் வழங்கிடவும் நகர்மன்ற உறுப்பினரால் கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கண்ட பொருள் தொடர்பான பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.70 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2023/இ1 | தீர்மானம் எண்.165<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31-07-2023 | பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 காளிக்குட்டி நாயக்கன் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து உள்ளதனை நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து | தீர்மானம் எண்.166<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். /2023/இ1 | | | |
| 31–07–2023 | பொருள் எண்.27<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.எம்.ஜூலைகா பீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல் -**<br>➢ 14-வது வார்டுக்குட்பட்ட காடம்பாடி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள குளத்தை துர்வாரி சுற்றும் சுவர் மற்றும் படித்துறை அமைத்து தரவும், பழைய நாகூர் சாலையில் காடம்பாடி வழி உள்ள சலவை குளத்தை துர்வாரி சுற்றுசுவர் மற்றும் படித்துறை அமைத்துத்தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | | | தீர்மானம் எண்.167<br>தீர்மானிக்கப்பட்டது. |

/உண்மை நகல்/

இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்